**தலைப்பு 140 - கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 292 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 140 | கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 2015.10.20 |
| 292 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 2015.06.16 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 5,789 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 5,438.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தினது தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 142.7 மில்லியன் மற்றும் ரூபா 207.8 மில்லியன் அளவில்

அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 3 சதவீத்திற்கும் 22 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 140 | 4,831.9 | 4,689.2 | 142.7 | 3 |
| 292 | 957.1 | 749.3 | 207.8 | 22 |
| மொத்தம் | 5,789.0 | 5,438.5 | 350.5 | 6 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 187.8 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதிஏற்பாட்டில் ரூபா 185.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் படி ரூபா 2.3 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | | பெறுவனவு | | வரவு மீதி |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளவாறான | குறைந்த எல்லை | உள்ளவாறான | உச்ச எல்லை | உள்ளவாறான |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 14001 | 10.0 | 9.9 | 4.0 | 5.7 | 30.0 | 17.7 |
| 29201 | 26.0 | 20.6 | 16.0 | 22.4 | 110.0 | 72.8 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் 7002/0000/00/0296/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 18,000 மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 16.15 மில்லியன் கூட்டு மொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** |
| கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0052/000 | 0.15 |
| கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் | 6000/0000/00/0015/0147/000 | 16.0 |
| **மொத்தம்** | | **16.15** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. தலைப்பு 140 - கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சுயதொழில் சுழற்சி நிதிய கடன் உத்தேச திட்டம் தொடர்பில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வரும் சேமிப்புக் கணக்கிற்குரிய வைப்புப் புத்தகமானது அமைச்சில் காணப்படாமையினால் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,586,709 கூட்டுத்தொகையான வைப்புத் தொகைக்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டில் அமைச்சிற்கு சமர்பிக்கப்பட்ட அமைச்சின் கீழ் தொழிற்படும் தனியார் கம்பனிக்கு உரிய கணக்காய்வு ஐயவினாவொன்றிற்கு 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

-------------------------------------

### 3.4.1 பாதீட்டு முரண்

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 மூலதனச் செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கு போதியளவு கட்டுநிதி திறைச்சேரியிடமிருந்து கிடைக்காத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் அச்செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 9 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடுகள் சேமிப்புக்கப்பட்டிருந்தன.

(ஆ) 05 செலவின விடயங்கள் தொடர்பில் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 35 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) நிதியேற்பாட்டின் தேவைப்பாடு தொடர்பாக முகாமைத்துவத்தினால் உரிய முறைப்படி எதிர்வுகூறப்படாமையினால் 04 செலவின விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 114,100,000 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும் அந்நிதியேற்பாட்டில் ரூபா 66,431,918 ஆன தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

திவிநெகும செயற்றிட்டத்தின் 2013 ஆம் ஆண்டின் தொடர் வேலைக்காகவும் 2014 ஆம் ஆண்டிற்காகவும் ரூபா 187.8 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்ததுடன் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு அப்பணம் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், செயலாற்றல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கையொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 பொது வைப்புக் கணக்குகள்**

வாகன விபத்தொன்றிற்காக 2013 மார்ச் 19 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 150,000 ஆன காப்புறுதி மேவுகைத் தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.6 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

14001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 257,716 ஆக இருந்ததுடன், அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 173,096 தொகையான கடன் மீதிகள் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.7 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டின் போது 04 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழ் செயற்படுகின்ற மகாவலி கால்நடை வளங்கள் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் செயற்பாடு உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் கம்பனி தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கால்நடை வளங்கள் பிரிவிற்குரிய 06 பிரதான செயற்திட்டங்களைப் பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டிற்குரியதாக விநியோகிக்கப்பட்டிருந்த 13 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மே 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சினால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அமைச்சிற்குரிய ரூபா 40,000,000 பெறுமதியான 08 மோட்டார் வாகனங்கள் 06 மாதங்கள் முதல் 32 மாதங்கள் வரையான காலவீச்சில் செயற்பாடற்று காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ் மெய்மையாய்வு அறிக்கை 2015 மே 26 ஆந் திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமாக 57 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்காக வாகனங்கள் தொடர்பான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்கெடுப்புச்சபை அறிக்கையின் பிரகாரம் அமைச்சரின் அலுவலகத்திலிருந்த மடிக் கணனியொன்று, டிஜிடல் கெமராவொன்று,

தொலைக்காட்சியொன்று, செல்லிடத் தொலைபேசியொன்று மற்றும் சாதாரண தொலைபேசியொன்று, 04 அவசர விளக்குகள், 04 இணையத்தள உபகரணங்கள் மற்றும் 02 Handheld detectors என்பன திருப்பி கையளிக்கப்படாதிருந்ததுடன், அப்பற்றாக்குறை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வெவ்வேறு பிரிவுகளிடமிருந்த பொருட்கள் தொடர்பாக 07 மிகைகள் மற்றும் 21 பற்றாக்குறைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அப் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் இனங்காணப்பட்டு அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியொன்றிற்கான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,364,452,605 ஆகும்.

## 3.10 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 94 | 1,326,255,391 | 12 செலவின விடயங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104 | 418,329 | 06 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 2003 சனவரி 01 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க சுற்றறிக்கை | 40,000,000 | 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 08 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய 423 ஆம் இலக்க சுற்றறிக்கை | 10,300,000 | 2010 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த வேலைவாய்ப்பு செயற்திட்டத்திற்காக தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு கடன்கள் வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த சுழற்சி நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.11 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்டிருக்காமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா. | | |
| கொட்டகல டேர்டோன் பகுதிக்கு நீர் வழங்கல் | 200,000 | - | கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| றொசிட்டா ஸ்கீம் வீதி அபிவிருத்தி | 4,787,000 | - | கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| கொட்டகல லொக்ஹில் கோவில் வீதி அபிவிருத்தி | 4,787,000 | - | கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| கெமுனுபுர பிரதான வீதிக்கு கொங்கிரீட் இடல் | 1,150,000 | 2013.09.04 | காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |

**(ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

அமைச்சினால் 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,102,940 பெறுமதியான வீதி கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்காக ரூபா 175,796 ஆன முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையால் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் இத்தொகை மீள அறவிடப்பட்டிருக்வில்லை.

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவினம் | தாமதத்திற்கு காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| சலசுமகம கிராமத்திற்கு நீர் வழங்கல் | 2,640,223 | 2012 .12.14 | 2013.03.14 | 2014.03.18 | 2,640,223 | காரணம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| கொரங்கு மலை வீதி நிர்மாணம் | 1,341,754 | 2012.12.31 | 2013.03.15 | 2013.12.31 | 1,382,084 | அதிக மழை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண்டருகொல்ல பாலம் நிர்மாணம் | 1,626,670 | 2012.07.23 | 2012.10.30 | 2014.05.27 | 1,696,807 | காரணம் குறிப்பிடப்பட்டிருக்வில்லை |
| இலுக்தென்னவத்த கீழ் பகுதிக்கு கொங்கிரீட் இடல் | 557,151 | 2013.03.11 | 2013.05.11 | 2014.02.16 | 560,624 | கட்டுநிதி வழங்கலில் தாமதம் |
| இரத்மலானை இந்து வித்தியாலயக் கட்டிட நிர்மாணம் | 12,947,837 | 2011.08.23 | 2012.08.23 | 2014.03.27 | 14,194,169 | சரியாக மதிப்பீடு செய்யாமை |

**(இ) கால தாமதங்களின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அச்செயற்திட்டங்கள் கால தாமதங்களின் பின்னர் மீளாய்வாண்டின் போது அரம்பிக்கப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | அமுல்படுத்திய நிறுவனம் | செயற்திட்டத்தின் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | தாமத காலம் |
|---|---|---|---|---|
| ரில்குல்ரி சமூக வலுப்படுத்தல் நிலையத்தின் திருத்தம் | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு | 278,712 | 2013.07.12 | 192 நாட்கள் |
| வட்டகொடை தோட்டத்தின் ஒரு பகுதிக்கு சுகாதார வசதிகள் வழங்கல் | மேற்படி | 566,115 | 2013.06.26 | 205 நாட்கள் |

**(உ) எந்தவொரு நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

கிராமிய சனசமூக அபிவிருத்தி பிரிவின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கிராமிய சனசமூக அபிவிருத்தியின் கீழ் 31 பல்வேறு உப செயற்திட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு என்பனவற்றின் மூலம் செயற்படுத்துவதற்காக ரூபா 28,956,377 தொகையான நிதிஏற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அமைச்சினால் அச்செயற்திட்டத்திற்காக எந்தவொரு பயன்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.12 செயலாற்றல்**

---------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) கிராமிய சனசமூக அபிவிருத்திப் பிரிவு**

-----------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது 10 செயற்பாடுகளுக்காக 514 கிராமிய சனசமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல்நவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 360 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 706 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 527 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட 514 செயற்திட்டங்களில் 381 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 133 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கால அட்டவணையின் பிரகாரம் ஒவ்வொரு செயற்பாட்டினதும் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றலினை நிறைவேற்றுதல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.8 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 3.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், தொடர்வேலை உட்பட 2014 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 514 செயற்திட்டங்களில் 381 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய தொடர்வேலை தொடர்பாக இவ்வறிக்கையில் எவ்வித பதிவொன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விசேட செயற்திட்டங்களுக்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த செயற்பாடுகள் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ரில்குல்ரீ சமூக வலுப்படுத்தல் நிலையத்தினை திருத்தியமைத்தல் மற்றும் நவீனமயப்படுதத்தல் செயற்திட்டத்திற்காக முற்பணம் செலுத்தப்பட்டு 192 நாட்கள் தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டதால் செலுத்தப்பட்ட ரூபா 55,309 ஆன முற்பணத்தொகை முகவர் நிறுவகத்திடம் விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 2.5 சதவீதம் நிறுத்திவைக்கப்பட்டு ஒப்பந்தம் முடிவடைந்து 06 மாதங்களின் பின்னர் ஒப்பந்தச் செயற்பாடு முறையாக நிறைவேற்றப்பட்டதா என பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பரீட்சிக்காமல் செயற்பாடு முடிவடைந்து 55 நாட்களின் பின்னர் முழுப் பணத்தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(v) ரம்பொடை கலாசார நிலையத்தின் மதிலுக்கருகில் மழைநீர் வடிந்து செல்லும் வடிகால் முறைமையொன்று நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரருடன் செல்லுபடியான உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொண்டிருந்தமைக்கான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், அதனால் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி, ஒப்பந்தப் பெறுமதி மற்றும் மற்றும் உடன்படிக்கை நிபந்தனைகள் என்பவற்றை இனங்காண முடியாமல் இருந்தது. மதிப்பிடப்பட்ட விலைக்கும் கொடுப்பனவு அறிக்கையின் விலைக்கும் இடையே போதியளவு வேறுபாடு காணப்பட்டதால் ரூபா 366,540 ஆன மேலதிகக் கொடுப்பனவொன்று கண்டறியப்பட்டது.

(vi) மஸ்கெலியா சுடலைக்கூடக் கட்டிடம் மற்றும் நுழைவு வீதி நிர்மாணத்திற்காக 2014 செப்தம்பர் 16 ஆந் திகதி முற்பணமாக ரூபா 289,683 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் நிர்மாணத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான எந்தவொரு தகவல்களும் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2015 மே 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாண வேலைகள் முடிவடையாமல் இருந்ததுடன், கோவையின்

பிரகாரம் உடன்படிக்கை காலம் நீடிப்புசெய்யப்படாதிருந்தமையினால் அத்திகதியில் தாமதக் கட்டணமாக 36 வாரங்களுக்காக ரூபா 91,224 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(vii) வட்டகொடை தோட்டத்தில் 15 மலசலகூட அலகுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலம் 2013 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை 90 நாட்களாக இருந்த போதிலும், அதன் பின்னர் இச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டமைக்கான எந்தவொரு தகவலும் கோவையின் பிரகாரம் கண்டறியப்பட்டிருக்கவில்லை. இச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2014 யூன் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், இதற்காக பெற்றுக் கொண்ட ரூபா 113,208 ஆன முற்பணத் தொகையொன்று 61 நாட்களாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பில் விளைவற்றுக் காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நீண்டகாலம் தாமதமாக இருந்த போதிலும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக ரூபா 33,966 தொகை செலுத்தப்பட்டிருந்தமை ஆக்கபூர்வமானதா என்பது கணக்காய்விற்கு சிக்கலொன்றாக இருந்தது.

**(ஆ) கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு**

---------------------------------------------------------------------------

இப்பிரிவிற்காக மீளாய்வாண்டின் போது ஆரம்ப மதிப்பீட்டில் ரூபா 1,441.20 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு வழங்கப்படாததன் காரணமாக அச்செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் இப்பிரிவிற்காக ரூபா 3,478 மில்லியன் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அத்தொகை பயன்படுத்தப்பட்ட விதத்தை காண்பிக்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டம்**

---

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இதன் கீழ் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 20 மில்லியன் தொகை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரு கோழிக் குஞ்சின் விலை ரூபா 400 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், வடமத்திய மாகாணப் பணிப்பாளரிற்கு 2770 கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு குஞ்சுக்கு ரூபா 497 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2770 கோழிக் குஞ்சுகளுக்காக ரூபா 268,690 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மகாவலி கால்நடை உற்பத்தி கம்பனியால் சந்தை தேவைப்பாட்டிற்காக இறைச்சி இருப்புக்களை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக உயிர் வாழும் கால்நடைகளின் உணவுத் வழங்கலுக்கு கம்பனிக்கு போதியளவு பணம் இல்லாமையால் கால்நடை உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இச்செயற்திட்டத்திலிருந்து ரூபா 1,055,770 தொகை அமைச்சினால் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) திட்டமிடல்**

---

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்படாமை**

---

கிராமிய சனசமூக அபிவிருத்தி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி பிரிவின் ஒவ்வொரு செயற்திட்ட தொகுதியின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய விபரங்கள் 2014 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருக்காமை மற்றும் திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பபட்டிருக்காமை காரணமாக திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய செயன்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிட்டு பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 3.13 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அமைச்சரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப் படையணியின் தொகுதியினை போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு லேன்ட்ரோவர் ஜீப் வண்டிகள் பழுதடைந்த நிலைமையில் காணப்படுவதால் இரண்டு புதிய ஜீப் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன் படி பழுதடைந்த இரண்டு வாகனங்களை அகற்றுவதற்கும் இரண்டு புதிய ஜீப் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கையில் மேற்குறித்த பழுதடைந்த இரண்டு வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,652,292 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய BD/EE/140/08/2013 ஆம் இலக்க தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அமைச்சரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 02 லேன்ட்ரோவர் கெப் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 செப்தம்பர் 13 ஆந் திகதி கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 45,600,000 பெறுமதியான இரண்டு பிராடோ லேன்ட் குருஷர் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான வாகனங்களுக்குப் பதிலாக வேறு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய BD/NS/190/03/01 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் கிடைத்த அங்கீகாரத்தின் பேரில் மீண்டும் ஒருமுறை 02 லேன்ட்ரோவர் கெப் வண்டிகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 9,046,741 தொகை செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை இவ்விரண்டு வாகனங்களில் ஒன்று மாத்திரம் அமைச்சிற்கு கிடைத்திருந்தமையால் வாகனக் கொள்வனவில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.14 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

--------------------------------------------------

2010 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்ட ரூபா 3,625,000 பெறுமதியான வாகனமொன்று திருத்த வேலைகளுக்காக 2010 நவம்பர் 11 ஆந் திகதி கராஜிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 மே 11 ஆந் திகதி வரையிலும் அவ்வாகனம் திருத்தம் செய்யப்பட்டு அமைச்சிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர்கள், கௌரவ பிரதி அமைச்சர்களின் பாவனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 3 ஆக இருந்த போதிலும், கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சருக்கு 14 வாகனங்களும் கௌரவ பிரதி அமைச்சருக்கு 05 வகனங்களுமாக 19 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

(ஆ) 38,420 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சனாதிபதி பாதுகாப்பு பிரிவிற்குரிய வாகனமொன்று 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி முதல் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் வாகனம் கையேற்கப்பட்டு 02 நாட்களின் பின்னர் டேர்போசார்ஜரை திருத்தியமைக்க ரூபா 446,827 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) குத்தகை வசதிகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வாகனமொன்று 2006 ஆம் ஆண்டின் போது அமைச்சின் சட்ட மதியுரையாளருக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், 2006 ஆம் ஆண்டில் அவரின் சேவை முடிவடைந்ததன் பின்னரும் அவ்வாகனம் அமைச்சிற்கு கையளிக்கப்படாதிருந்தமையால் அமைச்சினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து குத்தகை தவணை கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தவணைக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், குத்தகை தவணைகளாக ரூபா 7,432,095 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா

3,500,000 ஆக இருந்தமையால் ரூபா 3,932,095 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

இவ்வாகனம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெளிநபரொருவரிடமும் ஓராண்டு காலமாக குத்தகைக் கம்பனியிடமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அமைச்சிற்கு 06 வருடங்கள் இவ் வாகனத்திலிருந்து சேவை கிடைக்காமல் போயிருந்ததுடன், அவ்வாறு சேவை கிடைக்காமல் போன காலப்பகுதியில் குறித்த தரப்பினரிடமிருந்து எவ்வித அறவீடுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.16 முகாமைத்துவ நலிவுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இளைஞர்களை தொழில்களுக்கு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுயதொழில் வழங்கும் நோக்கில் தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு சுழற்சி நிதியமொன்றை ஆரம்பிப்பதற்காக அரச வங்கியொன்றில் ரூபா பத்து இலட்சம் வைப்புச் செய்வதற்கு 2000 ஆகஸ்ட் 24 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அங்கீகரிக்கப்பட்ட தொகையினை விஞ்சி ரூபா 300,000 தொகை 2014 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ii) இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன் தவிர்ப்புச் செய்பவர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இலங்கை வங்கியின் 2013 செப்தம்பர் 12 ஆந் திகதிய கணக்கு கூற்றின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டிலிருந்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தொகையில் கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்திருந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,845,061 தொகை வங்கியால் வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு தேவையான கடன்பெற்றவர்களின் பட்டியல், நிலுவையாக இருந்த கடன் அளவு மற்றும் நபர்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செயலற்று போனதால் மீண்டும் செல்லுபடியாக்கி இந்நிதியத்தின் நோக்கத்தை

நிறைவேற்றுவதற்கு வைப்புக்கள் காணப்படும் வங்கியுடனும் ஏனைய அரச வங்கியொன்றுடனும் வெவ்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், இணக்கப்பாட்டு உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்வதற்கு 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

(iv) வங்கியிலிருந்து கிடைக்கின்ற இரண்டு சதவீத வட்டியினைப் பெறுவதைத் தவிர 2011 ஆம் ஆண்டிலிருந்து இந் நிதியத்திலிருந்து எவ்வித நலனும் பெறப்படாதிருந்ததுடன், இந் நிதியத்தினை பயன்படுத்துவதற்கு தேவையான எதுவித எதிர்கால வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை இந் நிதியத்தின் மூலம் கடன் வழங்கல் தொடர்பில் தோட்டப்புற இளைஞர் யுவதிகள் அறிவூட்டப்பட்டிருந்தனரா என்பது தொடர்பில் தகவல்கள் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர்கள், கௌரவ பிரதி அமைச்சர்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட மிகை வாகனங்கள் தொடர்பாக, அவற்றை அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவனங்களின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தும் பொருட்டு உடனடியாக நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சனாதிபதி செயலகத்தின் மூலம் இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த 11 வாகனங்கள் 2010 ஆம் ஆண்டின் போது கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி உரித்து என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 04 வாகனங்களுக்கான குத்தகை தவணை 2014 யூலை மாதம் அளவில் செலுத்தி முடிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாகனங்களின் பதிவுச் சான்றிதழ் மற்றும் முழு உடமையாளர் போன்ற உரித்திற்குரிய ஆவணங்கள்

அமைச்சினால் குறித்த கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 1989 ஆம் ஆண்டின் போது உருவாக்கப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளர்ப்பு கம்பனி 2010 ஆம் ஆண்டிலிருந்து கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தின் போது கம்பனிக்குச் சொந்தமாகவிருந்த நிதி மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் நிலைமை தொடர்பான மதிப்பீடொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2005/2006 நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது பாதகமான அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், அதற்குப் பின்னர் நிதிக்கூற்றுக்கள் சுயாதீன கணக்காய்வாளரொருவரால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகமான நிர்வாக மற்றும் நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்ட அறிக்கைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் இக்கம்பனியின் நிதி நிலைமை மற்றும் பௌதீக செயற்பாடுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.17 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 21 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iiii) | இரண்டாம் நிலை | 84 | 71 | 13 |
| (iv) | ஆரம்ப நிலை | 74 | 63 | 11 |
| (v) | ஏனையோர் (அமைய / தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | 06 | 05 | 01 |
| | **மொத்தம்** | **196** | **164** | **32** |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 4. தலைப்பு 292 – விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

---

### 4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**பாதீட்டு முரண்**

---

02 மூலதனச் செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 45 சதவீதம் மற்றும் 60 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

### 4.2 பொது வைப்புக் கணக்கு

---

02 வருடங்களை விஞ்சிய ரூபா 6,774,770 கூட்டுத் தொகையான 88 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

---

29201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், சேவையை வறிதாக்கிச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து 17 ஆண்டுகாலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 23,265 தொகையை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

### 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய

போதிலும், மீளாய்வாண்டின் போது மூன்று கூட்டத் தொடர்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்கள்**

2004 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்படும் மோட்டார் சைக்கிளொன்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

வெளித்தரப்பினருக்குரிய 19 காணிக்கூறுகள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

**4.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| (i) 1989 மார்ச் 23 ஆந் திகதிய 19/89 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒரு தடவையில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக மேலதிக நேர படிகள் அங்கீகரிக்க முடியாத போதிலும், 2014 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக 163 ஊழியர்களுக்கு ஒரே தடவையில் மேலதிக நேர படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. |
| (ii) 1998 திசெம்பர் 30 ஆந் திகதிய 29/98 ஆம் | மொழித் தேர்ச்சிக்கான ஊக்குவிப்பு படிகள் பெறுகின்ற உத்தியோகத்தர்கள், படிகள் |

| | |
|---|---|
| இலக்க சுற்றறிக்கையின் 4.8 ஆம் பந்தி | பெற்றுக்கொள்ளாமலே மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், ஊக்குவிப்பு படிகள் பெறுகின்ற உத்தியோகத்தரொருவருக்கு 2013 ஆம் ஆண்டின் போது மொழிபெயர்ப்பிற்காக ரூபா 77,277 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 4.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் செயற்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அபிவிருத்தி நோக்கியதான ஆராய்ச்சி செயற்திட்டம் | 32,000,000 | 2014.01.01 | 2014.12.31 | 15,470,000 |
| கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினுள் பால் தொழில்நுட்ப ஆய்வு5கூடமொன்றை தாபித்தல் | 15,000,000 | 2014.01.01 | 2014.12.31 | 7,560,000 |
| மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 15,000,000 | 2014.01.01 | 2014.12.31 | 2,510,000 |
| கால்நடை தொற்றுநோய் அலகின் விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் | 14,000,000 | 2014.01.01 | 2014.12.31 | 2,080,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| கோழிகளை சுகாதார முகாமைத்துவ மூலம் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கு வசதிகள் அளித்தல் | 18,000,000 | 2014.01. 01 | 2014.12.31 | 10,400,000 |

**(ஆ) வெற்றியளிக்காத செயற்திட்டங்கள்**

திணைக்களத்தினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,870,400 கூட்டுத்தொகை செலவு செய்து சீப்புக்குளம் கால்நடை கட்டுப்பாட்டு பயிற்சி நிலையத்தின் குடிநீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக நீர் சுத்திகரிப்பு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு தவறியதால் 2015 மார்ச் மாதம் முதல் மாதமொன்றுக்கு ரூபா 15,000 வீதம் செலவு செய்து குடிநீர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2015 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மொத்தம் ரூபா 29,000 செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 யூன் 10 ஆந் திகதி அளவிலும் அவ் ஸ்தாபிக்கப்பட்ட சுத்திகரிப்பு அலகிலிருந்து குடிநீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

## 4.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 169 | 134 | 35 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 10 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 346 | 260 | 86 |
| (iv) | ஆரம்ப நிலை | 351 | 297 | 54 |
| | மொத்தம் | 877 | 701 | 176 |